# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

05.10.2020 திங்கட்கிழமை


## புதினம் தெரியுமோ?

கொரோனா உண்மையில் சமூகத் தொற்றாக உருவெடுத்துள்ளதா அல்லது ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றதா என்ற ஐயம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. குறிப்பாக சமூக வலைத்தள வாசிகள் கொரோனா ஊதிப்பெருப்பிக்கப்படுகின்றது என்றுதான் விவாதித்து வருகின்றனர். ஈஸ்டர் தாக்குதல்

2

## பரீட்சைகள் ஒத்திவைக்கப்படாது

கொழும்பு, ஒக். 5

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை என்பன நடைபெறும் தினங்களில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்தார். உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை பிற்போடுவதா இல்லையா என்ற இறுதித் தீர்மானம் இன்று மாலை அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இன்று காலை தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை என்பன நடைபெறும் தினங்களில் எவ்வித மாற்றமும் இல்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்துள்ளார். (ம-இ)

# புங்குடுதீவு பெண்ணுக்கு கொரோனா

2




# 72 பேருக்கு கொரோனா

## மோசமான நிலைமை; இராணுவத் தளபதி கவலை



கொழும்பு, ஒக்டோபர் 5

இலங்கையில் கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத் தொற்றாக உருவெடுத்துள்ளது. இதனால் கம்பஹா மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மேலும் 72 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது' இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா சுடர் ஒளியிடம் தெரிவித்தார்.

2

## கொரோனாவால் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் ஓட்டோ சாரதி

### நோய்க்காவியாக மாறும் அபாயம்

கொழும்பு, ஒக். 5

கம்பஹாவில் கொரோனாவால் தொற்றுக்குள்ளான பெண்ணின் கணவர் ஓட்டோ சாரதி

2

## கொரோனாவின் பிடிக்குள் மூன்று தடவை சிக்கியவர்

கொழும்பு, ஒக். 5

ஆனமடுவ, தென்னன்குரிய பிரதேசத்தை சேர்ந்த 23 வயதான இளைஞரொருவர் மூன்றாவது முறையாகவும் கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளார் என்று வடமேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் எம்.பரிட் தெரிவித்துள்ளார்.

2

## இந்தியர்களால்தான் கொரோனா பரவியதா?

கொழும்பு, ஒக். 5

கம்பஹா திவுலுப்பிட்டிய பகுதியில் கொரோனா பரவியமைக்குக் காரணம் அங்குவந்த இந்தியர்களே என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுகுறித்த உண்மைத் தகவலை அறிவதற்கான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்

2

## தனிமைப்படுத்தப்பட்டவர் தப்பித்ததால் பதற்றம்!

கொழும்பு, ஒக். 5

கொரோனா பெருந்தொற்றுக்கு உட்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் கொழும்பு துறைமுகத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபரொருவர் தப்பித்துச் சென்றுள்ளார். இதையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

2



20ஆம் திருத்தத்துக்கு எதிராக

## ஐக்கிய மக்கள் சக்தியினர் இன்று முதல் போராட்டம்

கொழும்பு, ஒக். 5

அரசமைப்பின் 20ஆம் திருத்தத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தி இன்று முதல் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளது என்று அதன் பொதுச்செயலரான நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கொழும்பில்

2

# கொரோனா எவ்வாறு பரவியது? இன்னும் நீடிக்கிறது மர்மம்!



கொழும்பு, ஒக். 5

திவுலப்பிட்டிய பெண்ணுக்கு எவ்வாறு கொரோனா பெருந்தொற்றுப் பரவியது என்பது இன்று மதியம் வரையிலும் கண்டறியப்படவில்லை.

இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவும், சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் இணைந்து மூலத்தை கண்டறிவதற்கான கூட்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

சுமார் 2 மாதங்களுக்கு பின்னர் நாட்டில் சமூகத் தொற்று ஏற்பட்டுள்ளதால், வைரஸ் எவ்வாறு சமூகத்துக்குள் ஊடுருவியது என்பதை கண்டறிவதிலும் அரசு தீவிரம் காட்டிவருகின்றது. அதே

2

# 72




அவர் மேலும் தெரிவித்ததாவது: 'கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் காணப்பட்டிருந்தார். இவர் மினுவாங்கொட பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற் சாலை ஒன்றில் மேற்பார்வையாளரா கப் பணிபுரிபவராவார்.
இதையடுத்து கம்பஹா மாவட்டத்தி லுள்ள திவுலப்பிட்டிய, மினுவாங்கொடை, வெயாங்கொடை ஆகிய மூன்று பொலிஸ் பிரிவுகளில் நேற்றிலிருந்து மறுஅறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமு றைப்படுத்தப்பட்டது.
அத்துடன் தொற்றுக்குள்ளான பெண் ணின் கணவர், பிள்ளைகள் மற்றும் மினுவாங்கொடை ஆடைத்தொழிற் சாலையில் பணிபுரியும் சகலரும் நேற்று தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களில் தொற்றுக்குள்ளான பெண்ணின் குடும்பத்தினருக்கு மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோத னையில் 16 வயது மகள் நேற்று மாலை கொரோனாத் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டார்.
அதன்பின்னர் குறித்த ஆடைத்தொ ழிற்சாலையில் பணிபுரிபவர்களில் முதல் தடவையாக 150 பேருக்கு நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் 72 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் திவுலப்பிட்டிய மற்றும் மினுவங் கொடை பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாவர். இது மோசமான நிலைமை யாகும்.
எனவே, நாட்டிலுள்ள சகல தரப்பின ரும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி தங்களின் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்' என்றார்.
அதேநேரம் கொரோனா தொற்றியி ருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்ப டையில் ஆயிரத்து 600 பேரிடம் பி.சி. ஆர் பரிசோதனைகள் இன்று மேற் கொள்ளப்படுகின்றன. (ம-22)

## கொரோனாவால்...

என்பதால் கூடுதல் அவதானமாகச் செயற்பட வேண்டி யிருக்கின்றது என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.
பெண்ணுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதில் இருந்து வெளிநபர்கள் எவரும் அந்தப் பெண்ணுடன் தொடர்புகளைப் பேணவில்லை. இது ஆறுதல் தரக்கூ டிய விடயம். அதேநேரம் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் ஓட்டோ சாரதி. இதனால் அவரின் பயண வழித்தடங்கள் பற்றிய தகவல்கள் தற்போது எடுக்கப் பட்டு வருகின்றன. இதன்காரணமாக கூடுதல் அவதான மாகச் செயற்பட வேண்டியிருக்கின்றது என்றும் தெரி விக்கப்பட்டது. (ம-இ)

## இந்தியர்களால்தான்...

டுள்ளன என்று பொதுசுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் அறிவித்துள்ளது.
திவுலுப்பிட்டியவில் உள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு குளிரூட்டிகளைத் திருத்தும் குழுவொன்று வந்தது என்றும் அதில் இந்தியப் பிரஜைகளும் இருந்தனர் என்றும் அங்கு தொழில்செய்யும் ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆடைத் தொழிற்சா லையின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று பயிற் சிக்காக அண்மையில் இந்தியா சென்று வந்தமையும் தெரி யவருகின்றது. இது தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-இ)



## கொரோனா எவ்வாறு...

வேளை, கம்பஹா மாவட்டம் கொரோனா அபாய வலய மாக விளங்குவதால் அங்கு செல்பவர்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனவும், சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்றவேண்டும் எனவும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அநாவசியமாக இப்பகுதிகளுக்குச் செல் வதை தவிர்த்துகொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-44)



## கொரோனாவின் பிடிக்குள்....

குறித்த இளைஞன் கடந்த ஒகஸ்ட் 18ஆம் திகதி டுபாயில் இருந்து நாட் டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். இதனையடுத்து நடத்தப்பட்ட முதல் கட்டப் பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர் வெலிகந்த மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு அங்கு அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. கொரோனாத் தொற்றில் இருந்து மீண்டபின்னர் தனது தாயுடன் வீட்டில் தனிமைப்ப டுத்தப்பட்டார். இதன்போது இரண் டாவது முறையாக அவருக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட் டது. பின்னர் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி சிலாபம் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச் சைபெற்று நலமாகி வீடு திரும்பிய பின்னர் மீண்டும் சுகவீனமுற்றார். மீண்டும் அவரிடத்தில் நடத்தப்பட்ட சோதனைகளில் மூன்றாவது முறையா கவும் தொற்று இருப்பது கண்டறியப் பட்டது. (ம-இ)

## தனிமைப்படுத்தப்பட்டவர்...

குறித்த நபர் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட புலனாய்வு விசாரணையில் அவர் தனது வீட்டில் தங்கியிருந்தது தெரியவந் தது. இதையடுத்து அவர் அவரது வீட்டி லேயே தனிமைப்படுத்தப்பட்டார். அந்த நபர் பயணம் செய்த இடங்கள் தொடர்பி லும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின் றன. (ம-இ)

## ஐக்கிய மக்கள் சக்தியினர்...

நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:
அரசமைப்பின் 20ஆம் திருத்தத்துக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தி இன்று முதல் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளது. இந்த நடவடிக்கையின் முதல் கட்டமாக இன்றைய தினம் நாடுமுழுவதும் கையேடு களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள் ளோம் என்றார்.
20ஆம் திருத்தத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான பரிசீலனை, ஐவர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியர சர்கள் குழு முன்னிலையில் இன்று 4ஆவது நாளாக வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## புதினம் தெரியுமோ?

விவகாரத்தில் கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் தம்பி அண்மையில் கோத்தாபய அரசால் விடுவிக்கப்பட்டிருந்தார். இதற்கு கோத்தாபய அரசுக்கு எதிராகக் கடுமையான விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டன. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைகூட இதைக் காரசாரமாக விமர்சித்ததுடன் கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க நாடாளும ன்ற உறுப்பினர்களை தான் சந்திப்பதற்கும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். இவற்றையெல்லாம் மூடி மறைப்பதற்காகத் தான் கொரோனா பூதாகரமாக்கப்படுகின்றது என்பது அவர்களின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமோ என்ற ஐயம் அனைவருக்கும் இருக்கத்தான் செய்கின்றது. ஏனெனில் இந்தச் சமூகத்தொற்றை கம்பஹாவுடன் முடிவுக்குக் கொண்டுவந்திருக்க முடியும். நாடெங்கிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவித்தமை, ஊரங்கை அமுல்படுத்தியமை என்பன வலுவான சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய கூடுதல் பரபரப்பு நடவடிக் கையே. மலிந்தால் சந்தைக்கு வரும்தானே.
-பட்சி

# புங்குடுதீவு பெண்ணுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.5
கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் பணிபு ரிந்து அண்மையில் புங்குடுதீவுக்கு திரும்பி இரு பெண்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது இன்று மாலை உறுதிசெய்யப்பட்டுள் ளது. கம்பஹா ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் ஏற்கனவே தனிமைப்படுத்தப் பட்டு கண்காணிக்கப்பட்டனர். இவர்களில் புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவரும் அடங்குகின்றனர். அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் உள்ளிட்ட சிலர் ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டனர். பி.சி.ஆர். பரிசோ தனைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த இரு பெண்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது இன்று மாலை உறுதிசெய்யப்பட் டது. இதையடுத்து புங்குடுதீவில் அவர்கள் பழகிய இடங்கள் அவர்களின் வழித்தடங்கள் என்பன தொடர்பில் இறுக்கமான புலன்விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாளை முதல் சுகாதார நடைமுறைகள் இராணுவத்தின ராலும் பொலிஸாராலும் இறுக்கமாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



அனலைதீவு ஆரோக்கிய அன்னை ஆலய நவநாள் திருவிழா கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழா நடைபெற்று எதிர்வரும் ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிபூஜையும் இடம் பெறும் மறுநாள் 10ம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாட்பாடல் பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும். (ந-9)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவர் வாகனங்களுடன் கைது

கிளிநொச்சி, ஒக.5

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிலாலி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இருவர் டிப்பர் மற்றும் உழவியந்திரத்துடன் பளை பொலிஸா ரால் நேற்றையதினம் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சாரதிகள் மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கபட்டுள்ளனர். அவர் களை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்ப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் கைப்பற்றப்பட்ட வாகனங்கள் பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கபட்டுள்ளன.

இதேவேளை குறித்த பகுதியில் தொடர்ச் சியாக மணல் அகழ்வு நடைபெற்றுவருவ தாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்படத்தக்கது. (ந-6)

## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் வைத்தியசாலையில்

கொடிகாமம், ஒக்.5

கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய வயோதிபர் மற்றும். யுவதி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

கொடிகாமம் கச்சாய் வீதியில் சென்ற வயோதிபரை, கொடிகாமம் பகுதியில் இருந்து கச்சாய் நோக்கிச் சென்ற மோட் டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற் றது. இந்தச் சம்பவம் கச்சாய் வீதி ஒட்டங் கேணி சனசமூக நிலையத்திற்கு அருகாமை யில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 3.45 மணிய ளவில் இடம்பெற்றது.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த எழுத்தாளர் சபாரத்தினம் (வரணியூரான் வயது 67) என்பவர் தலையில் காயம டைந்த நிலையிலும், மோட்டார் சைக்கி ளைச் செலுத்தி வந்த கிளாலியைச் சேர்ந்த குமரத்தினம் கிருஷா (வயது 18) என்பவ ரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில் தலையில் காயமடைந்த எழுத்தாளர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ந-9,159)



### 442 மில்லியன் ரூபா

# இழப்பீட்டை செலுத்தினர் கப்பல் உரிமையாளர்கள்

கொழும்பு, ஒக்.5

தீ விபத்துக்குள்ளான நியூ டைமன்ட் கப்பலின் உரிமை யாளர்கள் 442 மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையை இலங்கை அரசாங்கத்துக்கு செலுத்தியுள்ளனர் என அறி வித்துள்ளனர்.

இந்தத் தகவலை சட்ட மா அதிபர் திணைக்களம் உறுதிப்ப டுத்தியுள்ளது. இந்த இழப்பீட் டுத் தொகையானது தீய ணைப்பு நடவடிக்கைகளுக்காக செலவழிக்கப்பட்ட தொகை எனவும் கடல் மாசுபாட்டுக் கான இழப்பீட்டை உரிமையா ளர்களிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்



ளது என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி, அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

எம்.டி நியூ டைமன்ட் கப்பலா னது இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் செப்டெம்பர் 3 ஆம் திகதி விபத்துக்குள்ளானது. இந்தத் தீயானது இலங்கை கடற்படை, விமானப்படை மற்றும் இந்தியாவின் உதவியு டன் கட்டுக்குள் கொண்டுவரப் பட்டது. இதையடுத்து தீ விபத்தினைக் கட்டுப்படுத்தி யமை மற்றும் அதனால் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு என்பவற்றுக்காக இலங்கை சார்பில் சட்டமா அதிபர் திணைக்களமும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையும் 442 மில்லியன் ரூபா நஷ்ட ஈட்டுக் கோரிக்கையை கப்பல் உரிமையாளர்களிடம் முன்வைத்திருந்தனர். இந்தக் கோரிக்கைக்கு கப்பல் உரிமை யாளர் தரப்பு இணக்கம் தெரி வித்திருந்த நிலையில் இழப்பீட் டுத் தொகை செலுத்தப்பட்டுள் ளது. (வ-இ)

## கடலாமைகள் இறப்பு: விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.5

கடலாமைகளின் இறப்புக்கான காரணத்தைக் கண்ட றிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கடற்கரைப் பகுதிகளில் உயிரிழந்த நிலையில் 10க்கும் மேற்பட்ட ஆமைகள் கரையொ துங்கின. கல்கிஸ்ஸை கடற்கரையில் நேற்று முன்தி னம் மூன்று ஆமைகளின் உடலங்கள் கண்டெடுக்கப் பட்டன. ஐந்து ஆமைகளின் உடலங்கள் காலி முகத்திடல் கடற்கரையிலும் இரண்டு ஆமைகளின் உடலங்கள் வெள்ளவத்தை கடற்கரையிலும் நேற்று கரையொதுக்கின.

இதையடுத்து ஆமைகளின் மரணங்களுக்கான காரணத்தைக் கண்டறிய நிபுணர்களின் கருத்துக ளைப் பெற கல்கிஸ்ஸை நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற உத்தரவு கோரப்படும் என்று வன விலங்குத்துறை இயக்குநர் சூரியபண்டார தெரிவித் துள்ளார். இந்தக் காலகட்டத்தில் ஆயிரக்கணக்கான ஆமைகள் முட்டையிடுவதற்கு கடற்கரைகளுக்கு வரும்போது, மீன்பிடி வலைகளில் சிக்கி இறப்பது பொது வானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)



கண்டாவளை பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் வேண்டுதலுக்கு இணங்க, கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் ஏற்பாட்டில், சுவிஸ் ஆதாரம் அமைப்பின் நிதி அனுசரணையில், கண்டாவளை பிர தேசஷ மாற்றுத்திறனாளிகள் 8 பேருக்கு நேற்று ஞாயிற் றுக்கிழமை ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன. (ந-222)

## பஸ்களில் பயணிக்க முகக் கவசம் கட்டாயம்

கொழும்பு, ஒக்.5

முகக் கவசம் இல்லாது பஸ்களில் பயணிப்பதற்கு பயணிகள் அனுமதிக் கப்படமாட்டார்கள் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு இதுவரை இருக்கைகளின் எண் ணிக்கை அடிப்படையில் பஸ்ஸில் பயணிகளை ஏற்றுவதற்கு அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜே ரத்ன தெரிவித்துள்ளார்.

அதேநேரம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டமையால் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது.

எனவே பயணிகள் எந்தவொரு பிரச்சி னையும் எதிர்கொள்ளாது பாதுகாப் பாக பயணிக்க முடியும் என்று கெமுனு விஜேரத்ன மேலும் குறிப் பிட்டுள்ளார். (ற-இ)

## 849 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஒக்.5

வேலைவாய்ப்புக்குச் சென்ற மேலும் 849 பேர் நேற்று மாலை நாடு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் டுபாயில் இருந்து 400 பேரும், ஜப்பான் மற்றும் கட்டார் நாடுகளிலிருந்து 422 பேரும், தமிழ் நாடு சென்னையிலிருந்து 27 பேரு மாக மொத்தம் 849 பேர் நாடு திரும்பியுள்ள னர்.

இவர்கள் அனைவரும் விமான நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர். (ற-இ)

# தமிழ் வாக்குகளால் நாடாளுமன்றம் சென்றவர்கள் ‘20’ஐ ஆதரிக்கார்

## எம்.பி வடிவேல் சுரேஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5

தமிழ் வாக்குகளால் நாடாளுமன்றம் சென்ற எவரும் இருபதை ஆதரிக்கமாட்டார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் நுவரேலியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

9 ஆவது திருத்தம் அல்லது 19 பிளஸ் திருத்தத்தை ஆதரிக்கத் தயார். அதுவே எனது நிலைப்பாடு. மலையக மக்களுக்கு காணி உரிமை, இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் என்பவற்றுக்கு இருபதாவது திருத்தத்தில் உடன்பட்டால் இரு கரங்களை உயர்த்தி இதனை ஆதரிக்கத்



தயார். ஆனால் தாய், தந்தை இல்லாத இருபதை ஆதரிக்கத் தயாரில்லை. தமிழ் வாக்குகளால் நாடாளுமன்றம் சென்ற எவரும் “20” ஐ வாசித்து புரிந்திருந்தால் அதனை ஆதரிக்கமாட்டார்கள்” என்றார்.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் கூபா சம்பள அதிகரிப்பு தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

இது தொடர்பில் தீர்மானிக்க முதலாளிமார் சம்மேளனத்திற்கு தொழில் அமைச்சர் இரண்டு வாரகால அவகாசத்தை வழங்கியுள்ளார். எனவே அவர்களின் பதிலுக்காக காத்திருக்கின்றோம். இது தொடர்பில் செயலாற்ற அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சி என்றவகையில் எமக்கும் ஒரு தார்மீக பொறுப்பு உள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாக்கும் மேல் வழங்க வேண்டும். முதலாளிமார் சம்மேளனம் மனிதாபிமான நடந்துக்கொள்ள வேண்டும். ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்க எவர் முன்வந்தாலும் அதனை ஆதரிக்கத் தயார். இன்னும் 10 நாளில் சாதகமான பதில் கிடைக்காவிடின் பாரிய ஒத்துழையாமை போராட்டத்தை நடத்தத் தயார் என்றார்.

மேலும், சுத்தமானவர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொள்வதில் தவறில்லை எனவும் ஊழல்வாதிகளை இணைத்துக்கொண்டால் அதற்கு எதிராக செயற்படுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)



## சாட்சியமளிக்க ஆஜரானார் மைத்திரி

கொழும்பு, ஒக்.5

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் இன்று முன்னிலையானார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளுக்காக மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு செப்டெம்பர் 22 ஆம் திகதி அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதற்கிணங்கவே அவர் இன்று ஆஜராகியுள்ளார்.

இதேவேளை முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகவுள்ளமையும் குறிப்பி டத்தக்கது. (வ-இ)

## 50 கொடையாளர்களுடன் 13வது இரத்ததான முகாம்

தெல்லிப்பழை, ஒக.5

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடாத்திய 13வது இரத்ததான முகாமில் 50 தன்னார்வ குருதிக்கொடையாளர்கள் குருதிக் கொடை செய்திருந்தனர். நிகழ்வில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்விற்கு பூரண அனுசரணை வழங்கிய சங்கானை லயன்ஸ் கழகத்திற்கும் வருகைதந்த குருதிக் கொடையாளர்களுக்கும் தெல்லிப்பழை இரத்தவங்கியினருக்கும் ஏற்பாட்டாளர்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர். (ந-222)



## கோடாவுடன் ஒருவர் பளையில் கைது

கிளிநொச்சி, ஒக.5

கோடாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில், கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பளை பொலிஸ் நிலைய புலனாய்வு பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலுக்கு அமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியினை முற்றுகையிட்ட பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், ஒரு லட்சத்து 80 ஆயிரம் லீற்றர் கோடாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதான நபர் மேலதிக விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவரை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது என பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-6)

## அபிவிருத்தி நிதியம் அங்குரார்ப்பணம்

வவுனியா,ஒக்.5

வவுனியா பூந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயத்தின் பரிபாலசபையினரின் ஏற்பாட்டில் ஸ்ரீ லக்ஸ்மி நரசிங்கர் கல்வி சமூக நம்பிக்கை நிதியம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்வி மற்றும் சமூக மட்டத்தில் வறுமையில் வாடும் மக்களின் மேம்பாட்டை அடிப்படையாகக்கொண்டு கட்டமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள குறித்த நிதியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஆலயத்தின் பரிசாலனசபை தலைவர் கோ.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகதாரலிங்கம், கு.திலீபன், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர், இந்து கலாசார உத்தியோகத்தர் மற்றும் நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட வர்த்தக பிரமுகர்கள், சமூக நலன் விரும்பிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இவ் ஆரம்ப நிகழ்வில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. (ந-110)





## ஊரடங்கை மீறிய 10 பேர் கைது



கொழும்பு, ஒக்.5

ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் மினுவாங்கொடை பகுதியில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவது தொடர்பான தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொவிட்19 நோயளிகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மினுவாங்கொடை, திவுலபிட்டிய மற்றும் வெயாங்கொடை பொலிஸ் பிரிவுகளில் மறு அறிவித்தல் வரும் வரையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ எந்தவொரு நபரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஊரடங்கு உத்தரவுகளை மீறும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-இ)

# ஊரடங்கை மீறினால் சட்ட நடவடிக்கை உறுதி

## எச்சரிக்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஒக்.5

ஊரடங்குச் சட்டத்தை மீறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



திவுலப்பிட்டிய மற்றும் மினுவங்கொடை பிரதேசங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து கொரோனாப் பரவலை தடுக்கும் தேசிய நடவடிக்கை மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டத்தை மதித்து நடந்துகொள்ளுமாறு பிரதேச மக்களை கேட்டுக்கொள்கிறோம். ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்தில் எவரும் வீடுகளை விட்டு வெளியில் வரக் கூடாது. அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் பிரதேசத்தில் இயங்கும்.

சட்டத்தை மீறினால், கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும். பொலிஸ் அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் வீடுகளுக்கும், நிறுவனங்க ளுக்கும் செல்ல முடியும். ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பிரதேசங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுகாதார வழிமுறைகளை பின்பற்றுங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# இணையவழி ஊடாக பரீட்சை சான்றிதழ்கள்

கொழும்பு, ஒக்.5

இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், சுகாதார பாதுகாப்பு விடயங்களைக் கவனத்தில் கொண்டு, இலங்கை பரீட்சை திணைக்களத்தால் பரீட்சை சான்றிதழ்கள் இணையவழி ஊடாக வழங்கப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை திணைக்களத்துக்கு வரும் பொது மக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், ஏதேனும் பிரச்சினைகள் இருக்குமாயின், 1911 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பரீட்சை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# வான் விபத்து 13 பேர் காயம்

கொழும்பு, ஒக்.5

கினிகத்தேனை பம்பஹேனப் பகுதியில் வான் ஒன்று மண் மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட 13 பேர் காயமடைந்தனர்.

இவர்கள் சிகிச்சைக்காக கினிகத்தேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கினிகத்தேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் -கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை நகருக்கு அருகாமையிலுள்ள பம்பஹேனப் பகுதியில், வான் வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதுண்டு இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வானில் 15 பேர் பயணித்துள்ள நிலையில், 13 பேர் காயமடைந்துள்ளதுடன், அறுவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஆரம்பகட்ட சிகிச்சையின் பின்னர் 9 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். நுவரெலியாவில் மரண வீடொன்றுக்குச் சென்றுவிட்டு கம்பஹா பகுதியை நோக்கி மீண்டும் பயணிக்கையிலேயே காலை 8.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்துத் தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(றஇ)



### கொரோனா சமூகத்தொற்றைத் தடுப்பதற்கு

# விழிப்புணர்வுடன் செயற்படுங்கள்

## யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.5

சமூகத்தில் கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் விழிப்பாக செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாத் தொற்றானது மீண்டும் சமூகமட்டத்தில் பரவும் ஏதுநிலை உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டிய காலத்தினை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது யாழ் மாவட்டத்தினை பொறுத்தவரை சமூகத் தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் முகக்கவசங்கள் அணிவது அவசியம். அடுத்ததாக சமூக இடைவெளி மிகவும் அவசியமாகும். இவை இரண்டையும் தவிர்த்து கட்டாயமாக கைகளை கழுவுதல் வேண்டும். கண்ட இடங்களில் கை தொடுதல் கூடாது. பயணங்கள் செய்துவிட்டு வீடுகளுக்கு வரும்போது தமது கைகளை சுத்தமாகக் கழுவிய பின்னரே வீட்டுக்குள் செல்ல வேண்டும். பொதுவாக அநாவசியமாக வீதிகளில் பயணிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். இத்தகைய காப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் யாழ் மாவட்டத்தில் சமூகத்தொற்று ஏற்படுவதனை கட்டுப்படுத்தமுடியும்.

மேலும் மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும். கொரோனாத் தொற்று மீண்டும் ஏற்படுகின்றது என்ற அச்சத்தினால் மக்கள் எல்லோரும் பொது இடங்களில் ஒன்றுகூடுகிறார்கள். அதாவது வியாபார நிலையங்களில் பொருள்களை வாங்குவதற்காக முண்டியடிக்கிறார்கள். இது மிகவும் தவறான விடயமாகும்.

இது தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதன் மூலமே யாழ்ப்பாணத்தில் கொரோனா சமூகத்தொற்றினை கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ந-111)

### அரச உத்தியோகத்தர்களுக்கான

# புதிய பஸ் சேவை இன்று முதல்

மட்டக்களப்பு, ஒக்.5

அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய பஸ் சேவை ஒன்று இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனால் இன்று காலை 5 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு திருகோணமலை அரச உத்தியோகத்தர்களுக்கான இந்த புதிய பஸ் சேவை, இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு பிரதான பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து திருகோணமலைக்கு வேலைக்காக நாளாந்தம் சென்று வரும் நூற்றுக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள், பல்வேறு பட்ட சிரமங்களுக்கு மத்தியில் தமது சேவை நிலையங்களுக்கு கடமைக்காக சென்று வந்த நிலையில், இந்த பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் எச்.ஏ.எம். உவைஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ற-46)



# 1,500 மாணவர்களும் அவர்களது குடும்பங்களும் சுய தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.5

கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணின் மகளுக்கு, தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அவருடன் ஒன்றாகக் கல்வி கற்ற, 1500 மாணவர்களும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த மாணவி, திவுலப்பிட்டிய பிரதேசத்திலுள்ள பிரதான பாடசாலையொன்றில் கல்வி கற்று வந்துள்ளதுடன், தினமும் பாடசாலைக்குச் சமூகமளித்துள்ளதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர் சாதாரண தர வகுப்பில் கல்வி கற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ற-இ)

## வவுனியாவில் தீப் பரவல்: தீயணைப்பு படையால் கட்டுக்குள்!!



வவுனியா, ஒக்.5

வவுனியா நவகம பகுதியில் ஏற்பட்ட தீப் பரவல் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினரால் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. நேற்று மாலை வவுனியா நவகம வயல் பகுதியில் பரவிய இத் தீ, தண்டவாளம் வரை தீப்பிடித்திருந்தது. நவகம பாலம் வேலை செய்வதற்காக பாலத்திற்கு அருகே வைத்திருந்த மரங்கள் இத் தீயினால் எரிந்துள்ளன.

இந்நிலையில் தீப்பரவல் தொடர்பில் வவுனியா நகர சபை தீயணைப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட வவுனியா தீயணைப்பு பிரிவினர், அத் தீ மக்கள் குடிமனைக்குள் பரவலடையாது தடுத்ததுடன், வயல் பகுதியில் ஏற்பட்ட தீப் பரவலையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இவ் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈரட்டை பெரியகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-110)

## பிளாஸ்டிக் பொருள்களின் மீள் சுழற்சி செயற்றிட்டம்

### யாழ்.மாநகர முதல்வர் ஆரம்பித்துவைத்தார்

யாழ்ப்பாணம், ஒக்.5

மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களின் மூலம் அதன் மறுபாவனையைப் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டம் யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட்டினால் நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டது. உலக சுகாதார அமைப்பின் ஆரோக்கிய நகர் செயற்றிட்டத்தில் யாழ். மாநகரம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் இச் செயற்றிட்டத்திற்கு கொக்கோ கோலா நிறுவனம் அனுசரணை வழங்குகிறது.

மக்கள் பயன்படுத்திய மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள், ரப்பர் வகைகள், துணி வகைகள் என்பவற்றை சேகரிக்கும் சுமார் 50 கிலோ தாங்கக்கூடிய 10 கூடைகள் யாழ் மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், யாழ். குருநகர் துறைக்கு முதற்கட்டமாக சுமார் 5,000 கிலோ வரையான மீள்சுழற்சி பொருள்களை சேகரிக்கக்கூடிய கூடைத்தொகுதியும் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக யாழ் நகரத்தை அண்டிய 5 பாடசாலைகள் மற்றும் 5 பொதுஇடங்களுக்கு இக் கூடைகள் வழங்கப்பட்டன.

பிளாஸ்டிக் பொருள்களினால் மனித குலத்திற்கும் கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு இத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

ஆகவே மக்கள் தமது வீடுகளில் சேரும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருள்களை தமது பகுதிகளில் அல்லது பாடசாலைகளில் காணப்படும் குறித்த கூடைகளில் இட்டு, இத் திட்டம் சிறந்த முறையில் செயற்பட ஒத்துழைக்க வேண்டும் என யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் தெரிவித்தார். (ந-20)

## ஏ-9 வீதியில் விபத்து: வாகனம் சேதம்

கிளிநொச்சி, ஒக.5

கிளிநொச்சி பகுதியில் இந்து மதகுருமார் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகியதில் வாகனம் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது. வாகனத்தில் பயணித்தவர்கள் காயங்களின்றி தப்பித்தனர். இவ் விபத்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த வானின் முன்னுள்ள சக்கரத்தில் காற்று வெளியேறியதால், வான் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் ஏ9 வீதியின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரங்கள் சேதமடைந்ததுடன் வீதி மின்விளக்கு கம்பமும் சேதமடைந்துள்ளது. இதனால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

விபத்தினால் தமக்கு ஏற்பட்ட இழப்பு தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை மதிப்பீடு செய்து வருகின்றது. குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-6)

## புத்தர் சிலையை விற்க முயன்ற நால்வர் கைது

புத்தர் சிலை ஒன்றை விற்பனை செய்ய முயற்சித்த சந்தேக நபர்கள் நால்வர் மொனராகலை கும்புக்கன பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

## மிகக் குறைந்த இரசாயனத்துடன் கொரோனாப் பரிசோதனை

### விஞ்ஞானிகள் புதிய முயற்சி



நியூயோர்க், ஒக்.5

கொரோனாப் பரிசோதனை மேற்கொள்வதற்காக, மிகக் குறைந்தளவிலான இரசாயனப் பொருள்களுடன் புதிய எளிமையான முறையொன்று அமெரிக்க விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந் நாட்டின் 'பிளோஸ் பையாலஜி'என்ற அறிவியல் இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாப் பரிசோதனைக்கு விலையுயர்ந்த இரசாயனப் பொருள்கள் தேவைப்படுகிறன.

இந் நிலையில், மிகக் குறைந்தளவிலான இரசாயனப் பொருள்களுடன் புதிய முறையொன்றை விஞ்ஞானிகள் அண்மையில் ஆய்வு செய்தனர்.

ஏற்கனவே தொடர் சோதனை முறையில் கொரோனா நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்ட 215 மாதிரிகளையும், கொரோனா தொற்று இல்லை என்று உறுதி செய்யப்பட்ட 30 மாதிரிகளையும் கொண்டு அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதில், கொரோனா நோய்த் தொற்று இல்லாத மாதிரிகளை புதிய முறையைக் கொண்டு பரிசோதித்ததில் 100 சதவீதம் சரியான முடிவுகள் வந்தன.

கொரோனா நோய்த்தொற்று ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட மாதிரிகளிலும் 92 சதவீத முடிவுகள் புதிய முறையில் சரியாக இருந்தன. மிகக் குறைந்த எண்ணிக்கையில் கொரோனா வைரஸ் கிருமி காணப்பட்ட மாதிரிகளில் தான் புதிய சோதனை முறை தோல்வியடைந்தது.

இதன் மூலம், மிகக் குறைந்த இரசாயனப் பொருள்களுடன் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த முறையில், மிகக் குறைந்த செலவில் கொரோனாப் பரிசோதனை செய்ய முடியும்; மேலும், பரிசோதனைக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் கிடைக்காத பகுதிகளுக்கு இந்தப் புதிய முறை வரப்பிரசாதமாக இருக்கும் என்று அந்த அறிவியல் இதழில் குறிப்பி டப்பட்டுள்ளது. (வ-இ)



## ஆதரவாளர்களுக்காக விதிமுறைகளை மீறிய அமெரிக்க ஜனாதிபதி

வொஷிங்டன், ஒக்.5

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மருத்துவமனைக்கு வெளியே திரண்ட ஆதரவாளர்களைச் சந்திப்பதற்கு வளாகத்தை விட்டு வெளியேறியுள்ளார்.

ட்ரம்ப் கொரோனாத் தொற்று சிகிச்சைக்காக ராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் வைத்தியசாலைக்கு வெளியே திரண்ட ஆதரவாளர்களைச் சந்திப்பதற்கு குண்டு துளைக்காத வாகனத்தில் பயணம் செய்தார். வாகனத்தின் கண்ணாடி வழியாக ஆதரவாளர்களைப் பார்த்து கையசைத்தார். ட்ரம்பின் இந்த செயல் சுகாதார விதிமுறைகளை மீறியது என மருத்துவ நிபுணர்கள் சாடியுள்ளனர்.

அவரது பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இச் செயல் அபத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (வ-இ)



## இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு 65 லட்சத்தை கடந்தது

புதுடில்லி, ஒக்.4
இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனாப் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் அது தற்போது 65 இலட்சத்தை தாண்டியுள்ளது. மத்திய சுகாதாரத்துறை நேற்றுக் காலை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் 65 இலட்சத்து 49 ஆயிரத்து 373 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 55 இலட்சத்து 9 ஆயிரத்து 966 பேர் பாதிப்பிலிருந்து குணமடைந்துள்ளனர், 9 இலட்சத்து 37 ஆயிரத்து 625 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இதுவரை கொரோனா வைரஸால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 101, 782 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் தீவிரம்

### ஆர்மேனியா அறிவிப்பு

அஸர்பைஜானின் தாக்குதலில் இருந்து தமது நாட்டு மக்களை பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக ஆர்மேனியா அறிவித்துள்ளது.
1990 களில் அஸர்பைஜானின் கட்டுப்பாட்டில் இருந்து விலகிய நாகோர்னோ கராபாக் பகுதியில் இடம்பெறும் மோதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 230 ஆக அதிகரித்துள்ளது.
இந்நிலையில், கராபாக் கிராமத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம் என அஸர்பைஜான் தெரிவித்துள்ளது.
கராபாக் கிராமத்தை கைப்பற்றியமை தொடர்பில் அஸர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியெவ் இராணுவத் தளபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-இ)

## ஆப்கானில் குண்டுத்தாக்குதல் 15 பேர் உயிரிழப்பு

காபூல், ஒக்.5
ஆப்கானிஸ்தானில் நங்கர்ஹார் மாகாணத்தில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் 15 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
இத் தாக்குதலில் சுமார் 40 பேர் வரை காயமடைந்துள்ளனர்.
உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது. மேலும் இத் தாக்குதல்களினால் அப்பகுதியிலுள்ள கட்டடங்களும், வாகனங்களும் சேதமடைந்துள்ளன என அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந் நிலையில் இத் தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)





## எகிப்தில் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட சவப்பெட்டிகள் காட்சிக்கு வைப்பு

கெய்ரோ, ஒக்.5
எகிப்தில் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட 59 சவப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
அந்தச் சவப்பெட்டிகள் அந்நாட்டின் தலைநகர் கெய்ரோ அருகே கடந்த ஒகஸ்ட் மாதம் கண்டுபிடிக்கப்பட்டவை என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இப் பெட்டிகள் 10 முதல் 12 மீற்றர் ஆழத்தில் புதைக்கப்பட்டி ருந்தன எனவும் அவற்றுடன் எகிப்திய கடவுள் சேக்கரின் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (வ-இ)

U.S. Citizenship
and Immigratio
Services

## கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு அமெரிக்கா தடை

வொஷிங்டன், ஒக்.5
உலகின் எந்தவொரு நாட்டிலும் வதியும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அமெரிக்காவில் குடியேறுவதற்கு தடை விதித்து அமெரிக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அமெரிக்க குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் அமைப்பு மூலம் இப் புதிய கொள்கை அறிவிப்பை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது. (வ-இ)

## நியூசிலாந்தில் தேர்தல் வாக்கெடுப்பு பணிகள் ஆரம்பம்



வெலிங்டன், ஒக்.5
நியூசிலாந்து பொதுத்தேர்தலின் முதற்கட்ட வாக்கெடுப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. அந்நாட்டு தொழிற்கட்சி தலைவரும், பிரதமருமான ஜெசிந்த ஆர்டன் இரண்டாவது முறையாகவும் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் தேர்தலில் போட்டியிடுகின்றார். கொவிட் 19 தொற்று பரவலை தடுக்கும் பணியில் நியூசிலாந்து வெற்றியடைந்துள்ளது. இதனால் ஜெசிந்தா ஆர்டன் தலைமையிலான அரசாங்கம் மீண்டும் ஆட்சிபீடம் ஏறுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமென அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.
தேர்தலுக்கென 450 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
தேர்தலின் இறுதிக்கட்ட வாக்கெடுப்பு எதிர்வரும் 17ம் திகதி இடம்பெறவுள்ளது. அமைதியான முறையில் தேர்தல் வாக்கெடுப்பு பணிகள் இடம்பெறுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை கொவிட் 19 தொற்று பரவலைத் தடுக்கும் விதத்தில் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வாக்கெடுப்பு இடம்பெறுமெனவும், மக்கள் அதனை கவனத்திற்கொண்டு தமது வாக்குகளை செலுத்த முன்வரவேண்டுமெனவும் பிரதமர் ஜெசிந்த ஆர்டன் அறிவுறுத்தியுள்ளார். (வ-இ)

# மகுடம் சூடியது றேஞ்சஸ் அணி

கரவெட்டி, ஒக்.5



கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அணிகள் பங்குபற்றிய 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நவசக்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதியது.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர்.

ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர் வினோதனின் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை கைலாஸ் நேர்த்தியான கோலைப் போட்டு முதலாவது கோலைப் பதிவு செய்தார். இதனால் முதல் பாதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின.

ஆனால் 34 ஆவது நிமிடத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர் கைலாஸின் சிறப்பான பந்துப் பரிமாற்றத்தை சரியாக கணித்த பிரசாந்தன் தனது அணிக்கான 2 ஆவது கோலை பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுக் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன் மற்றும் சிறந்த கோல் காப்பாளர் போன்ற விருதுகளை கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர்களான பாக்கியராஜ், கைலாஸ், முகுந்தன் ஆகியோர் முறையே பெற்றனர். (ற-422)



# நிமலேந்திராவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட தடகளத் தொடரில் ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் கரவெட்டி பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர். நிமலேந்திரா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச அணிகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களிற்கான தடகளத் தொடர் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான குண்டு போடுதலில் கரவெட்டி பிரதேச அணியை பிரதிநிதித்துவம் செய்த ஆர். நிம லேந்திரா 12.74 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், பருத்தித்துறை பிரதேச அணியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 12.15 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை பிரதேச அணியை பிரதிநிதித்துவம் செய்த ஆர். ரதீஸ்வரன் 10 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ற-422)

# இன்றைய ஆட்டங்கள்

யாழப்பாணம், ஒக்.5

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் "யாழின் நாயகன்" கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து புத்தூர் எவறெஸ்ட் அணியும், 4.30 மணிக்கு மனோகரா அணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணியும் மோதவுள்ளன. (ற-422)

# 9 பதக்கங்களைச் சுவீகரித்தது சண்டிலிப்பாய் பிரதேச அணி

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் பிரதேச செயலங்களுக்கு இடையில் நடத்திய திறந்த வயது மெய்வல்லுநர் போட்டியில், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் ஊடாக சண்டிலிப்பாய் பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்து ஒரு தங்கம், 5 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 9 பதக்கங்களைச் சுவீகரித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது.

சுஜிகரன் 1,500 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத் தையும், 5,000 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றார். கே.வினுசாந்த் 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத் தையும், எஸ்.டிதூர்சன் 10,000 மீற்றர் ஓட்டத் தில் வெள்ளிப் பதக்கத்தையும், டி. டார்வின் 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், எம். கிருத்திகரன் 400 மீற்றர் ஓட்டம் மற்றும் 400 மீற்றர் சட்டவேலி ஓட்டம் என்ப வற்றில் வெண்கலப் பதக்கத்தையும் 4 x 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ற-422)

# நடிகை தமன்னாவுக்கு கொரோனா



நடிகை தமன்னாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் தனது பெற்றோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பதாக நடிகை தமன்னா தனது சமூகவலைதள பக்கத்தில் பதிவிட்டிருந்தார். இந்நிலையில், ஹைதராபாத்தில் நடைபெற்று வந்த வெப் தொடரின் படப்பிடிப்பில் கலந்துகொண்ட நடிகை தமன்னாவுக்கு கொரோனா அறிகு கள் ஏற்பட்டு, பரிசோதனை செய்தபோது அவருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து ஐதராபாத்தில் இருக்கும் தனியார் வைத்தியசாலையில் தமன்னா அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# மஞ்சள் மனிதர்



மேற்காசிய நாடான சிரியாவின் வட பகுதியில் உள்ள அலெப்பு எனும் நகரில் வசிக்கிறார், அபு ஐக்கூர். வயது, 77. பழைய சாமான்கள் விற்பனையாளர்.

இவர், 36 ஆண்டுகளாக, தலை முதல் பாதம் வரை, மஞ்சள் நிற உடைகளை மட்டுமே அணிகிறார். 1983ஆம் ஆண்டு முதல் இப்பழக்கத்தை கடைப்பிடிக்கிறார்.

இவர் பயன்படுத்தும் வீட்டு பொருள்கள் அனைத்தும் கூட மஞ்சள் நிறத்தில் தான் இருக்கிறதாம். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறார், இந்த மஞ்சள் மனிதர்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்சால் 05.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.